25.06.2024

O.S.No.29/2014

வா.சா.3.திரு.பக்ருதின் த.பெ அரபுஷாராவுத்தர்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்தில் சீனிராவுத்தர் அவரது கடைசி கால கட்டங்களில் குடியிருந்து வந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி குடியிருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால், அவர் அங்கு குடியிருக்கவில்லை. தாவா சொத்து நாங்கள் விற்பனை செய்த போது காலியிடமாக இருந்தது, நான் 5-6 மாதங்களுக்கு முன்பு சென்று பார்த்ததாக சொல்வதால், அப்போது தாவா சொத்து என்ன நிலைமையில் இருந்தது என்றால், நான் தாவா சொத்தினை விற்பனை செய்வதற்கு 5-6 மாதத்திற்கு முன்பு பார்த்தேன், அப்போது காலியிடமாக இருந்தது , அதன்பின்பு நான் பார்க்கவில்லை. தாவா சொத்து குறித்து பொய்யான ஆவணங்களை தயாரித்து, மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் இந்த வழக்கிற்காக கூறப்படும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல.